BRAMPTON

Media Release

உடனடி வெளியீட்டுக்காக

# ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகமானது, அட்வான்ஸ் ப்ராம்ப்ட்டன் நிதியம் (Advance Brampton Fund) மூலமாக, தொண்டு நிறுவனங்கள் மற்றும் லாப நோக்கற்ற நிறுவனங்களுக்கு  மானியம் வழங்குவதாக அறிவிக்கிறது

ப்ராம்ப்ட்டன் , ON (April 6, 2021) – 2021 ஆண்டு அட்வான்ஸ் ப்ராம்ப்ட்டன் நிதியத்தின்  [Advance Brampton Fund (ABF)] ஒரு அங்கமாக, ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகமானது,  ப்ராம்ப்ட்டன் நகரைத் தளமாகக் கொண்ட, 42 எண்ணிக்கையிலான லாபநோக்கமில்லாத அமைப்புக்கள், மற்றும் தொண்டு நிறுவனங்களுக்கு ஆதரவளிப்பதற்காக, மானியத்தொகை ஒதுக்கீடு செய்கிறது. .

மானியம் பெறுபவர்கள் அடங்கிய பட்டியலை இங்கு காணலாம்: நகரின் வலைத்தளம்.

நகர சபையானது, இந்த ABF க்கான நிகழ்ச்சித்திட்ட வரைவின், திட்டப்பணிகளுக்கான– புதிதாக எழவிருப்பவை, வளர்ந்து வருபவை மற்றும் மென்மேலும்  வளருபவை – எனும் மூன்று பிரிவுகளுக்கு அக்டோபர்  2020 இல் ஒப்புதல் அளித்தது.  வளர்ந்து வருகின்ற மற்றும் மென்மேலும் வளருகின்ற அமைப்புக்களுக்கான விண்ணப்பம் செய்யும் காலக்கெடு தேதியானது பிப்ரவரி 3, 2021 ஆக குறிக்கப்பட்டிருந்தது.

புதிதாக எழவிருக்கும் தொண்டு செய்கின்ற அமைப்புக்கள் மற்றும் லாப நோக்கில்லாத நிறுவன அமைப்புக்கள் என்னும் பிரிவு இந்த ஆண்டில் புதிதாக சேர்க்கப்பட்டுள்ளது;  இது ப்ராம்ப்ட்டனில் புதிய மற்றும் இனிமேல் வரவிருக்கின்ற திட்டப்பணிகளுக்கு ஆதரவளிக்கிறது மற்றும் காலாண்டுக்கு ஒரு முறை என விண்ணப்பங்களை வரவேற்கிறது. விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்வதற்கான இரண்டாவது அழைப்பு இப்போது விடுக்கப்பட்டுள்ளது. இனிமேல் வரவிருக்கின்ற திட்டப்பணிகள் என்னும் பகுதிக்கு கீழாக ப்ராம்ப்ட்டன் நகரை தளமாக கொண்ட தொண்டு நிறுவனங்கள் மற்றும் லாப நோக்கமில்லாத அமைப்புக்களுக்கு $5,000 வரையிலான மானியம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது . இந்த மானியத்தொகைக்காக விண்ணப்பிக்க வேண்டிய கடைசி தேதி ஏப்ரல், 30 2021 ஆகும். நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் வழிகாட்டுதல்களுக்கு வருகை தரவும்: www.brampton.ca/ABF.

*சுகாதாரமான மற்றும் பாதுகாப்பான நகரமாக* வைப்பதற்கென பங்காற்றுவதே, ப்ராம்ப்ட்டன் நகரசபையின் முன்னுரிமை கொண்ட விஷயங்களில் ஒன்றாக இருக்கிறது. சமுதாயத்தின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வு ஆகியவையே ABF நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னெழுந்துவரும் தேவையென அடையாளம் காணப்பட்டது;  இதனாலேயே ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகமானது, சமுதாயத்தின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வுத் திட்டப்பணிகளுக்காக இந்த அமைப்புக்களுக்கு நிதி வழங்கியது.

பிக் ப்ரதர்ஸ் அண்ட் பிக் சிஸ்ட்டர்ஸ் ஆஃப் பீல் (Big Brothers Big Sisters of Peel) என்னும் அமைப்பானது, ABF *இன் மென்மேலும் வளரும்* பகுதிக்கென வழங்கப்பட்ட 2021 ஆம் ஆண்டின் மானிய ஒதுக்கீடுகள் பெற்ற அமைப்புக்களில் ஒன்றாக இருந்தது; இது அந்த அமைப்பின் போற்றிக்காக்கும் தன்மைக்காக வழங்கப்பட்டது. போற்றிக்காக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் யாவும், ப்ராம்ப்ட்டன் நகர இளைஞர்களை நேர்மறை எண்ணம் கொண்ட இளைஞர்களாக உருவாக்கும் வகையில் குருவாக இருப்பது, அவர்களை சமுதாய ஈடுபாடு கொள்ளச் செய்வது, அவர்களுக்கு வாய்ப்புக்களை திரும்பத் திரும்ப உருவாக்குவது மற்றும் தலைமைப்பண்புகளை வளர்ப்பது ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

இந்த நிறுவன அமைப்பானது, நான்கு ப்ராம்ப்ட்டன் குழு வழிகாட்டல் திட்டப்பணிகளுக்கான நிதியாக, $ 25,000 தொகையைப் பெற்றது; இதில் பதின்ம வயதினருக்கான வழிகாட்டல் குழு திட்டங்கள் இரண்டு ; மற்றும் ஷெரிடன் கல்லூரியில் (Sheridan College) ‘பிக்ஸ் ஆன் கேம்பஸ்’ (Bigs on Campus’) எனும் குழு வழிகாட்டல் திட்டம் ஒன்று; மற்றும், ஷெரிடன் கல்லூரி (Sheridan College)யில் கறுப்பர் இன இளைஞர் வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டம் ஒன்று ( இது துவக்கப்படுவதற்காக).

**அறிஞர் கூற்றுக்கள்**

“ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகமானது, தனித்துவமான மற்றும் மதிப்புமிக்க பங்களிப்புக்களைச் செய்து சமூக தேவைகளை பூர்த்தி செய்யும் திட்டங்களை வழங்குகின்ற, நகர சேவைகளை பூர்த்திசெய்கின்ற, மற்றும் 2018-2022 க்கு இடைப்பட்ட காலத்தில் நகரசபை செய்ய வேண்டிய முன்னுரிமை கொண்ட விஷயங்களை முன்னெடுப்பதில் பங்களிக்கின்ற இந்த தொண்டு நிறுவனங்களையும் மற்றும் லாப நோக்கற்ற நிறுவனங்களையும் அங்கீகரிக்கிறது. அட்வான்ஸ் ப்ராம்ப்ட்டன் நிதியம் மூலமாக ப்ராம்ப்ட்டனில் இந்த முதலீடுகள் தொடர்ந்து செய்யப்பட்டு வருவதைக் கண்டு பெருமிதம் நாம் கொள்கிறோம். ”

- *பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

“திருவிழாக்கள் மற்றும் நிகழ்வுகளை ஆதரிப்பதில் தொடங்கி, இளைஞர்களுக்கும் மூத்தகுடிமக்களுக்கும் சுகாதார மற்றும் நல்வாழ்வுக்கான திட்டங்களை வழங்கும் உள்ளூர் இலாப நோக்கற்ற நிறுவனங்கள் வரையில், 2040 ஆண்டிற்கான தொலைநோக்குப் பார்வையை இலக்கு வைத்து நம்மை முன்னோக்கி நகர்த்திச் செல்லவும், நமது நகரத்தை கட்டியெழுப்பும் முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதற்குமான முனைப்புக்களுக்கு ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் ஆதரவளிக்க உறுதிபூண்டுள்ளது. நமது சமூகத்திற்கு ஆதரவளிப்பதற்காக, ABF நிதிபெற்றவர்கள் செய்யும் அர்த்தமுள்ள பணிகளுக்கு நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். ”

- *ரொவீனா சான்ட்டோஸ், பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 1 & 5; துணைத்தலைமை பொறுப்பு, பெருநிறுவன சேவைகள், ப்ராம்ப்ட்டன் நகரம்*

"புதிதாக வரவிருக்கும் தொண்டு நிறுவனங்களின் திட்டங்களுக்காக, காலாண்டுக்கு ஒருமுறை விண்ணப்பிக்கும் வாய்ப்பு இருப்பதினால், அனைத்து தொண்டு நிறுவனங்கள் மற்றும் இலாப நோக்கற்ற நிறுவனங்களும் மானியம் பெறுவதற்காக, இந்த மாதம் ஏப்ரல் மாதத்தில் விண்ணப்பிப்பதை நான் ஊக்குவிக்கிறேன். உங்கள் நிறுவனங்கள்தான் ப்ராம்ப்ட்டன் சமூகத்தை வளர்க்கும் திட்டங்களை வழங்குகின்றன; மற்றும் குடியிருப்பாளர்களின் தரமான வாழ்க்கையில் நேர்மறையான மாற்றத்தை ஏற்படுத்துகின்றன. ”

- *ஹர்கிரத்சிங், நகர கவுன்சிலர், வார்டுகள் 9 & 10; தலைமை பொறுப்பு, பெருநிறுவன சேவைகள், ப்ராம்ப்ட்டன் நகரம்*

“அட்வான்ஸ் ப்ராம்ப்ட்டன் நிதியமானது, சமூகத்தில் உள்ள தொண்டு செய்கின்ற மற்றும் இலாப நோக்கற்ற நிறுவனங்களுடன் கூட்டாளராக இருந்து, குடியிருப்புவாசிகளுக்கு பயனளிக்கும் திட்டங்களை வழங்குவதற்கும், நகரசபையின் முன்னுரிமைகொண்ட விஷயங்களுடன் ஒத்துப்போவதற்கும் இணங்குவதற்கும், மற்றும் ப்ராம்ப்ட்டன் 2040 தொலைநோக்குப் பார்வை திட்டத்தை ஆதரிப்பதற்கும் உதவுகிறது. நமது சமூகத்தில் உள்ள பலரின் வாழ்க்கையை மேம்படுத்த இந்த குழுக்கள் செய்யும் முக்கியமான பணிகளை ஆதரிக்க எங்கள் குழு உறுதிபூண்டுள்ளது. ”

- *டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 700,000 மக்களையும் 75,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது**. நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். ***Twitter***, ***Facebook***, மற்றும் ***Instagram*** ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். ***www.brampton.ca*** இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**

மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல்தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
**905-874-3426 |** Monika.Duggal@brampton.ca